# ரத்த தான முகாம்



**மார்த்தாண்டம், மார்ச் 7–**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் மாணவர் பேரவை சார்பில் ரத்த தான முகாம் நடந்தது. முதல்வர் டாக்டர் ஷீலா கிறிஸ்டி தலைமை வகித்தார். தாளாளர் டாக்டர் வினோத்குமார் முன்னிலை வகித்தார். மாணவர் பேரவை தலைவர் ஆகாஷ் வரவேற்றார். ஆசாரிப்பள்ளம் அரசு மெடிக்கல் காலேஜ் ரத்த வங்கி டாக்டர் ராகேஷ் பேசினார். 55 தன்னார்வ தொண்டர்கள் ரத்ததானம் வழங்கினர். மாணவர் பேரவை உறுப்பினர் வர்ஷா நன்றி கூறினார். இளைஞர் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் டாக்டர் ஜோஸ்பால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.